பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

07 10 2025 6 45

செவ்வாய்க்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

- நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் தொடங்க உள்ள நிலையில் குடியரசு துணைத்தலைவரும், மாநிலங்களைத் தலைவருமான திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்த உள்ளார்.
- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் மீதான தாக்குதலுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.
- விண்வெளி மற்றும் பாதுகாப்புத்துறை சார்ந்த தொழில்களுக்கான சர்வதேச வர்த்தக மாநாடு சென்னையில் இன்று தொடங்குகிறது.
- சிறுநீரக மாற்று மோசடி குறித்து விசாரணை நடத்த உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும் திமுக அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.
- ஆர்க்டிக் ஓபன் பேட்மிண்டன் கலப்பு இரட்டையர் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Jaglan M - Jaglan L இணை நெதர்லாந்தின் Wassink - Jaille இணையை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் அடுத்த மாதம் தொடங்க உள்ள நிலையில் இந்த கூட்டத்தொடரை சுமூகமாக நடத்த பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுடன் குடியரசு துணைத்தலைவரும், மாநிலங்களைத் தலைவருமான திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று ஆலோசனை நடத்த உள்ளார்.

மாநிலங்களவைத் தலைவராக அவர் பொறுப்பேற்ற பின்னர் நடத்தப்பட உள்ள முதல் கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்று மாநிலங்களவை செயலகத்திற்குச் சென்ற திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மாநிலங்களவை செயலர் மற்றும் உயர் அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தினார்.

அவையின் நடவடிக்கைகள், சட்டம் இயற்றுதல், நிர்வாகப் பணிகள், அவை உறுப்பினர்களின் பணிகள் குறித்து அவர்களிடம் கலந்துரையாடினார்.

<<<<>>>>

விண்வெளி மற்றும் பாதுகாப்புத்துறை சார்ந்த தொழில்களுக்கான சர்வதேச வர்த்தக மாநாடு சென்னையில் இன்று தொடங்குகிறது.

இம்மாதம் 9ஆம் தேதி வரை 3 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டை தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

விண்வெளித் துறையில் சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் புதுமைகள் குறித்த தகவல்களை தொழில்துறை வல்லுநர்களுக்கு வழங்கும் வகையில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

செயற்கைக்கோள் மற்றும் ராக்கெட்டுகளுக்கான உதிரி பாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், பாதுகாப்பு தளவாட உற்பத்தி நிறுவனங்கள், ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றன.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாயுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

உச்சநீதிமன்றத்தில் நேற்று ஒரு வழக்கு விசாரணையின்போது தலைமை நீதிபதி மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒவ்வொரு இந்தியரையும் கோபப்படுத்தியுள்ளதாக பிரதமர், அவரிடம் தெரிவித்தார்.

நமது சமூகத்தில் இதுபோன்ற செயல்களுக்கு இடமில்லை என்றும், இது வன்மையாக கண்டிக்கத்தக்கது என்றும் அவர் சமூக வலைதளத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாக்குதல் சூழ்நிலையை எதிர்கொண்டபோதும் தலைமை நீதிபதி அமைதியாக நடந்துகொண்டதை பாராட்டிய பிரதமர், நீதி மற்றும் நமது அரசியல் அமைப்பின் மீது அவர் வைத்துள்ள நம்பிக்கையை இது காட்டுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தலைமை நீதிபதியின் மீதான தாக்குதலுக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

தீபாவளி பண்டிகைக்காக ஆவின் நிறுவனம் பல்வேறு இனிப்பு மற்றும் கார வகைகளை அறிமுகம் செய்துள்ளது.

இந்த ஆண்டு சேலம் பால் கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் 42 மெட்ரிக் டன் ஆவின் இனிப்பு மற்றும் கார வகைகள் விற்பனைக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தருமபுரி மாவட்டத்தில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கப்பட்டு 2 ஆண்டுகள் ஆகியும் புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படவில்லை என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் குற்றம் சாட்டியுள்ளார்.

தருமபுரியில் நேற்று பல்வேறு இடங்களில் பிரச்சாரம் செய்த அவர், காவிரி உபரிநீர் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றினால்தான் தருமபுரி மாவட்ட விவசாயிகள் பயனடைவார்கள் என்று கூறினார்.

கடந்த 5 ஆண்டுகளில் மாநிலத்தில் அதிக அளவில் டாஸ்மாக் கடைகள்தான் திறக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழக தொல்லியல் துறை முன்னாள் இயக்குநரும், வரலாற்று ஆய்வாளருமான நடன காசிநாதன் நேற்று சென்னையில் காலமானார். அவருக்கு வயது 85.

தமிழ்நாடு அரசு ஆவண காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி மையத்தை நிறுவியதில் அவர் முக்கியப் பங்காற்றியுள்ளார்.

தமிழ் பிராமி கல்வெட்டுகள், தொல்லியல், வரலாறு, நாணயவியல், செப்பேடுகள் என பன்முக ஆய்வுகளை மேற்கொண்டு பல நூல்களையும் அவர் எழுதியுள்ளார்.

அவரது மறைவுக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உட்பட பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

கரூரில் த.வெ.க. கூட்டத்தின்போது நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தது தொடர்பாக உயர்நீதிமன்றம் நியமித்துள்ள சிறப்புப் புலனாய்வுக் குழுவினர் நேற்று இரண்டாவது நாளாக விசாரணை நடத்தினர்.

காவல்துறை உயரதிகாரி அஸ்ரா கார்க் தலைமையிலான குழுவினர் காவல்துறை, வருவாய்த்துறை, மின்சாரத்துறை, நெடுஞ்சாலைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகளிடம் 4 மணி நேரம் விசாரணை நடத்தினர்.

நெரிசல் ஏற்பட்ட வேலுச்சாமிபுரத்தில் பொதுமக்களை சந்தித்து அவர்களிடமும் விசாரணை நடத்தினர்.

<<<<>>>>

மேற்குதிசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தின் ஒருசில இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம், தருமபுரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக கூறப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதியில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

திருச்சியில் நடைபெற்ற சிறுநீரக மாற்று மோசடி குறித்து விசாரணை நடத்த சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், காவல்துறை உயரதிகாரி பிரேம் ஆனந்த் சின்ஹா தலைமையில் சிறப்பு விசாரணைக் குழுவை அமைக்க நீதிமன்றம் உத்தரவிட்டும் இதுவரை மாநில அரசு அந்தக் குழுவை அமைக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

ஆனால் கரூர் சம்பவத்தில் மட்டும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்ட உடனே விசாரணைக் குழுவை மாநில அரசு அமைத்தது, அரசின் இரட்டை நிலைப்பாட்டை எடுத்துக்காட்டுவதாக திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

<<<<>>>>

பாரம்பரிய விவசாய வளர்ச்சித் திட்டத்தினால் தமிழ்நாட்டில் சுமார் 37 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

2015ஆம் ஆண்டு மத்திய அரசு அறிமுகப்படுத்திய இந்த திட்டத்தின்கீழ் வேளாண்மையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

இந்த திட்டத்தின்கீழ் மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களில் உள்ள விவசாயிகளுக்கு 3 ஆண்டுகளுக்கு ஹெக்டேருக்கு 31 ஆயிரத்து 500 ரூபாய் நிதி உதவியும் வழங்கப்படுகிறது.

மாநிலத்தில் 32 ஆயிரத்து 940 ஹெக்டேர் நிலப்பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதற்காக தமிழக விவசாயிகளுக்கு கடந்த ஆண்டு வரை 42 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதியுதவியை மத்திய அரசு வழங்கியுள்ளது.

<<<<>>>>

ஆஃப்கனிஸ்தான் மற்றும் திபெத்தில் இன்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

<<<<>>>>

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்துள்ள காஸா அமைதி திட்டம் தொடர்பாக எகிப்தில் இஸ்ரேல்-ஹமாஸ் இடையே பேச்சுகள் தொடங்கியுள்ளன.

<<<<>>>>

இந்தியா-கத்தார் இருதரப்பு வர்த்தகம் இன்னும் 5 ஆண்டுகளில் இரட்டிப்பாகும் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

<<<<>>>>

அசாம் மாநில அரசு ஊழியர்களுக்கு ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

<<<<>>>>

உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசுவை அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி சந்தித்து உடல்நலம் விசாரித்தார்.

<<<<>>>>

தமிழ் வளர்ச்சித்துறை சார்பாக தமிழால் முடியும் வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி விழுப்புரம் மாவட்டம் மயிலத்தில் உள்ள கலை அறிவியல் கல்லூரியில் இன்று தொடங்க உள்ளது.

<<<<>>>>

தமிழ்நாடு நிலப் பயன்பாடு மற்றும் வளம் குன்றா எதிர்காலத்திற்கான ஆராய்ச்சி குறித்த சர்வதேச மாநாடு சென்னை ஐ.ஐ.டி. ஆராய்ச்சிப் பூங்காவில் நேற்று தொடங்கியது.

<<<<>>>>

சென்னை பெரியமேட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலக கட்டிடத்தை வணிக வரித்துறை அமைச்சர் திரு. மூர்த்தி நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

<<<<>>>>

சென்னை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அறிவியல் அணுகல் கூடத்தினை உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு. T.Y. சந்திரசூட் நேற்று திறந்து வைத்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆர்க்டிக் ஓபன் பேட்மிண்டன் கலப்பு இரட்டையர் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Jaglan M - Jaglan L இணை நெதர்லாந்தின் Wassink - Jaille இணையை எதிர்கொள்கிறது.

ஃபின்லாந்தில் நடைபெற உள்ள இந்தப் போட்டியின் மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் கபிலா - Crasto இணை, பிரான்சின் Renoir - Pognante இணையை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

சென்னையில் நடைபெறும் ப்ரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தில்லி அணி 29-26 என்ற புள்ளிக் கணக்கில் ஜெய்ப்பூர் அணியை வென்றது.

மற்றொரு போட்டியில் பட்னா அணி 36-28 என்ற புள்ளிக் கணக்கில் உத்தரப்பிரதேச அணியை வென்றது.

இன்றிரவு 8 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் தமிழ்நாடு அணி - பட்னா அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>